# 17

# நீதிமானாக்கப்படுதலின் இரண்டு முறைமைகள்

## [4:4–8]

அபிலேன் கிறிஸ்தவக் கல்லூரியில் ரோமருக்கு எழுதிய நிருபம் பற்றிய வகுப்பு, 4ம் அதிகாரத்தை அடைந்தபோது, எங்கள் போதகரான J. D. தாமஸ் அவர்கள், கரும்பலகையில் எழுதத்தொடங்கினார். அவர், "இந்த அதிகாரத்தில் பவுல் நீதிமானாக்கப்படுதலின் இரண்டு முறைமைகளை வேறுபடுத்தி ஒப்பிடுகிறார்" என்று கூறினார்.[1] அவர் எழுதுவதை முடித்தபோது, அவரது முயற்சிகள் பின்வருவன போன்று காணப்பட்டன:

| நியாயப்பிரமாணம்/கிரியைகள் முறைமை | கிருபை/விசுவாசம் முறைமை |
|---|---|
| மேன்மைபாராட்டுதல் | தாழ்மை |
| ஈட்டுதல் | கிரியைகளினால் ஆனதல்ல |
| மனிதத் தகுதி | சுயத்தினால் ஆனதல்ல |
| சாதனை | தேவனுடைய கிருபையை நம்புதல் |
| கடன் | ஒரு கொடை |

அவர் இரண்டாவது பத்தியைத் தட்டிக்காட்டி, "அதை எபேசியர் 2:8, 9 உடன் ஒப்பிட்டுப்பாருங்கள்" என்று கூறினார்.

இந்தப்பாடத்தில் நாம் ரோமர் 4ஐப் பற்றிய நமது படிப்பைத் தொடருகிறோம். இந்த அதிகாரம் பற்றிய நமது கலந்துரையாடலை நாம் முடிக்கும் வேளையில், சகோதரர் தாமஸ் அவர்கள் வேறுபடுத்தி ஒப்பிட்டுக் காட்டியது உங்கள் சிந்தையில் தெளிவாகும் என்று நான் நம்புகிறேன்.

## ஒரு கருத்து ஆராயப்படுகிறது (4:4-8)

### இரண்டு முறைமைகள் (வசனங்கள் 4, 5)

வசனம் 4ல், பவுல் நியாயப்பிரமாணம்/கிரியைகள் முறைமையைத் தொகுத்துரைத்தார்: "கிரியை செய்கிறவனுக்கு வருகிற கூலி கிருபை யென்றெண்ணப்படாமல் [*logizomai*[2]], கடனென்றெண்ணப்படும்." சிறிதளவே விளக்கம் தேவை அல்லது விளக்கமே தேவையில்லை என்னும் அளவுக்கு இங்கு எடுத்துரைக்கப்பட்ட கொள்கை மிகவும் தெளிவாக உள்ளது. நீங்கள் யாருக்கேனும் வேலை செய்தால், உங்கள் ஊதியத்தை நீங்கள் ஒரு அன்பளிப்பாகவோ அல்லது கொடையாகவோ கருதுவதில்லை. உங்களை வேலைக்கு அமர்த்தியவர் உங்களுக்கு "தயவு" செய்கிறார் என்று நீங்கள் நினைப்பதில்லை.

மரியாதைக்காக நீங்கள், "உங்களுக்கு நன்றி" என்று கூறலாம், ஆனால் உண்மையில் அவர் உங்களுக்கு அந்தப்பணத்தைத் தரக் கடன்பட்டுள்ளார் என்றே நீங்கள் நம்புகிறீர்கள்.

ஆங்கில வேதாகமத்தில் (NASB) "favor" என்று ரோமர் 4:4ல் மொழி பெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை, ''கிருபை'' என்பதற்கான *charis* என்ற சொற்றொடராகும் (KJVயில் காணவும்). "What is due" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது, ''சட்டப்பூர்வமாகக் கொடுக்க வேண்டிய,''[3] ஒரு ''கடன்'' என்று அர்த்தப்படும் *opheilema* என்ற வார்த்தையாகும். நியாயப்பிரமாணம்/கிரியைகள் முறைமை என்பது, நாம் *கிருபையினால்* இரட்சிக்கப்படுவதில்லை, ஆனால் அதற்கு மாறாக நமது நற்செயல்கள் தேவனை நமக்கு *கடனாளி*யாக்குகின்றன என்று அறிவிக்கிறது.

வசனம் 5ல், பவுல் அந்த முறைமையை கிருபை/விசுவாசம் முறைமையுடன் நேரெதிராக ஒப்பிட்டார்: "ஒருவன் கிரியை செய்யாமல் பாவியை நீதிமா னாக்குகிறவரிடத்தில் விசுவாசம் வைக்கிறவனாயிருந்தால், அவனுடைய விசுவாசமே அவனுக்கு நீதியாக எண்ணப்படும்.'' ''ஒருவன் கிரியை செய்யாமல்'' என்ற சொற்றொடருக்குத் தகுதிகள் சில தேவைப்படுகிறது. சந்தர்ப்பப்பொருளில் இருந்து அதை வெளியே எடுத்தால், அது கர்த்தருக்கு ஊழியம் செய்தல் அவசியமற்றது என்று மறைமுகமாய் உணர்த்துவதுபோன்று காணப்படும் - இந்தக் கருத்து மதரீதியான பெரும்பான்மையான எழுத்தாளர்களை அச்சுறுத்துவதாயிருக்கும், இது நிச்சயமாகவே பவுலை அதிர்ச்சிக்கு உள்ளாக்கி இருக்கும். கர்த்தருக்கு ஊழியம் செய்தல் முக்கியத்துவமானதாக இருந்தது என்று பவுல் நம்பினாரா? நிச்சயமாக. ரோமர் 16:12ல் அவர் "கர்த்தருக்குள் மிகவும் பிரயாசப்பட்ட" பெர்சியாளை வாழ்த்தினார். பவுல் தமது வாசகர்கள் தங்களுக்குரிய எல்லா வற்றையும் "கர்த்தருடைய ஊழியத்தில்'' இடவேண்டும் என்று அவர்களை உற்சாகப்படுத்தினார் (1 கொரிந்தியர் 15:58; கலாத்தியர் 5:6; எபேசியர் 2:10; கொலோசெயர் 1:10; 1 தீமோத்தேயு 5:17; 6:18 ஆகிய வசனங்களைக் காணவும்). பவுல் செய்ததைக் காட்டிலும் அதிகமாக எவரொருவரும் தமது எஜமான ருக்காகப் பிரயாசப்பட்டாரா என்பது சந்தேகத்திற்குரியதாகும் (1 கொரிந்தியர் 15:10; 2 கொரிந்தியர் 11:23, 27ஐக் காணவும்).

ஆகவே "ஒருவன் கிரியை செய்யாமல்'' என்ற சொற்றொடருக்குச் சிலவிளக்கங்கள் தேவை என்பது தெளிவாக உள்ளது. 4 மற்றும் 5 ஆகிய வசனங்களில் உள்ள இரண்டு சொற்றொடர்களை ஒப்பிட்டுப் பார்த்தலே இதை விளக்குவதற்கு மிகவும் எளிமையான வழிமுறையாக உள்ளது: "கிரியை செய்கிறவனுக்கு" மற்றும் "ஒருவன் கிரியை செய்யாமல்." "கிரியை செய்கிறவன்" (வசனம் 4) என்பவர், ஊதியம் பெறுவதற்காக ''வேலை செய்கிற'' ஒரு வேலையாளாக இருக்கிறார். ''ஒருவன் கிரியை செய்யாமல்'' (வசனம் 5) என்பதில் உள்ளவர் கர்த்தரைத் தனக்குக் கடனாளியாக்குவதற்காக ''கிரியை செய்யாமல்'' ஆனால் அதற்கு மாறாக அன்பையும் மதிப்பையும் காட்டுவதற்காகக் கிரியை செய்கிற விசுவாசியாக இருக்கிறார். லியோன் மோரிஸ் என்பவர், "கிரியை செய்பவர் மற்றும் கிரியை செய்யாது இருப்பவர் ஆகியோருக்கிடையே அல்ல (பவுல் சோம்பேறித்தனத்தை [ஊக்குவிப்பவர்] அல்ல), ஆனால் தனது கிரியையில் நம்பிக்கை வைத்திருப்பவருக்கும் தேவன்மீது நம்பிக்கை வைத்திருப்பவருக்கும் இடையில்தான் நேர்மாறு ஒப்பீடு உள்ளது"

*என்று எழுதினார்.*[4]

| | |
|---|---|
| *நியாயப்பிரமாணம்/கிரியைகள் முறைமை* | *கிருபை/விசுவாசம் முறைமை* |
| ↑ | ↑ |
| *சுயத்தில் நம்பிக்கை* | *தேவன்/கிறிஸ்துவில் நம்பிக்கை* |

*இந்தத் தகுதியை மனதில் கொண்டவர்களாக, நாம் 5ம் வசனத்திற்குத் திரும்புகிறோம். இது, "ஒருவன் [தேவனைத் தனக்குக் கடனாளியாக்குவதற்காக] கிரியை செய்யாமல் பாவியை நீதிமானாக்குகிறவரிடத்தில் விசுவாசம் வைக்கிறவனாயிருந்தால்" (வசனம் 5அ). ஆங்கில வேதாகமத்தில்* "ungodly" *(இது தமிழில் "பாவி" என்றுள்ளது) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (asebes என்ற) வார்த்தை, "தேவனிடத்தில் பயபக்திசெலுத்துதலைக் கைவிட்ட" ஒருவனை விவரிக்கும் "பலத்த சொற்றொடராகும்." "முற்றிலுமாக தகுதியற்றவர்களை" தேவன் நீதிமானாக்குகிறார்.*[5] *தேவன் தம்முடைய குமாரனைக் கிருபாதாரபலியாக ஒப்புக்கொடுத்தபடியால் (ரோமர் 3:26) அவர் இதைச் செய்ய வல்லவராக இருக்கிறார்; "கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார்" (5:6ஆ).*

*ஒருவர் தேவன்மீது (மற்றும் அவரது குமாரன்மீது) தனது நம்பிக்கையை வைக்கும்போது, "அவரது விசுவாசம் நீதியென்று எண்ணப்படுகிறது (logizomai)." முந்தியபாடத்தில், நாம் "தேவனுடைய திகைப்புக்குரிய 'கணக்குவைக்கும் ஏற்பாடுகள்' " பற்றிப் பேசினோம். 4:5ல், தேவன் இந்த "கணக்கு வைக்கும் ஏற்பாட்டை" நம்மிடத்தில் பயன்படுத்துகிறார் என்று நமக்கு உறுதியளிக்கப்பட்டது!* TEV *என்ற வேதாகமத்தில்* "it is his faith that God takes into account" *என்றுள்ளது.*

**இரண்டாவது உதாரணம் (வசனங்கள் 6-8)**

*ரோமர் 4ல் பவுல் கிரியைகளினால் அல்ல ஆனால் விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்பட்ட ஒருவருக்கான தமது முதன்மை உதாரணம் என்ற வகையில் ஆபிரகாம்மீது கவனம் செலுத்தினார். இருப்பினும், 6 முதல் 8 வரையுள்ள வசனங்களில், அவர் இரண்டாவது உதாரணம் ஒன்றை உட்செருகினார், இவர் யூதர்களால் வந்தனம் செலுத்தப்பட்ட இன்னொரு தனிநபராயிருந்தார்: தாவீது அரசர். தேவன் "பாவியை நீதிமானாக்குகிறார்" என்று பவுல் அப்போதுதான் கூறியிருந்தார். ஆபிரகாம் "பாவியாக" இருந்தாரா இல்லையா என்பதுபற்றி சில யூதர்களின் மனதில் கேள்வியிருக்கலாம், ஆனால் தாவீதைப்பற்றி அவ்விதமான ஐயப்பாடு எதுவும் இருந்திருக்க முடியாது. ஒரு சில வாரங்களில் தாவீது, பத்துக்கட்டளைகளில் நான்கை மீறியிருந்தார் (2 சாமுவேல் 11; 12; யாத்திராகமம் 20:13, 14, 16, 17). தாவீதின் உதாரணம், விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதலின் கொள்கை பழைய ஏற்பாட்டில் போதிக்கப்பட்டிருந்தது என்ற உண்மையை மறுவலிவாக்குவது மட்டுமின்றி, அது இந்தக் கொள்கையின்*

தொலைவில் சென்றடையும் இயல்பை விவரிப்பதாகவும் இருக்கும்.

பவுல் பின்வருமாறு கூறினார்,

> அந்தப்படி, கிரியைகளில்லாமல் தேவனாலே நீதிமானென்றெண்ணப்படுகிற மனுஷருடைய பாக்கியத்தைக் காண்பிக்கும்பொருட்டு: "எவர்களுடைய அக்கிரமங்கள் மன்னிக்கப்பட்டதோ, எவர்களுடைய பாவங்கள் மூடப்பட்டதோ, அவர்கள் பாக்கியவான்கள்.[6] எவனுடைய பாவத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ, அவன் பாக்கியவான் என்று தாவீது சொல்லியிருக்கிறான்" (வசனங்கள் 6-8).[7]

இங்கு மேற்கோள் காட்டப்பட்ட வசனப்பகுதி சங்கீதம் 32:1, 2 ஆகும். பல எழுத்தாளர்கள், 51 மற்றும் 32 ஆகிய சங்கீதங்கள் பத்சேபாளுடன் பவுல் செய்த பாவத்தை[8] எடுத்துரைப்பதாக நம்புகின்றனர் - சங்கீதம் 51ல் தாவீது மன்னிப்பிற்காகக் கதறினார்,[9] சங்கீதம் 32 அவரைத் தேவன் மன்னித்தபின்பு நன்றி நிறைந்த தன்மைக்கான அவரது வெளிப்பாடாக இருந்தது[10] என்கின்றனர்.

சங்கீதம் 32:1, 2ல் தாவீது, "கிரியைகளின்றி தேவன் நீதிமானாக கணக்கிட்ட (*logizomai*) மனிதனின் பாக்கியத்தைப்பற்றி" பேசினார் என்று தாவீது கூறினார் (ரோமர் 4:8). இந்தக் காட்சி அமைவில், "நீதிமானென்றெண்ணப்படுகிற" என்பது மாபெரும் அநீதிமான் என்ற குற்றம் உள்ள ஒருவரை (தாவீதை) தேவன் "நீதிமானென்று கணக்கிட்ட" விஷயம்பற்றிக் குறிப்பிடுகிறது. வேறுவார்த்தைகளில் கூறுவதென்றால், ரோமர் 4:6ல் தேவனுடைய "நீதிமானென்றெண்ணப்படும்" விஷயமானது தவறு செய்யும் தமது பிள்ளையை அவர் மன்னித்தல் பற்றியதாக உள்ளது.

சங்கீதம் 32:1, 2ல் தாவீது, தேவனுடைய இரக்கத்திற்குத் தமது நன்றியறிதலைக் காண்பித்தார். அவர் தாம் எவ்வளவு நன்றியுள்ளவராக இருந்தார் என்று காண்பிப்பதற்காகச் சொற்றொடர்களைப் பெருக்கம் செய்தார். கிரேக்க மொழியில் இரு வார்த்தைகள் அவரது பாவத்தின் ஏராளத்தன்மையை விவரிக்கின்றன: *anomia* என்பதன் பன்மை வடிவம் (இது "அக்கிரமச்செய்கைகள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது) மற்றும் *hamartia* ("பாவம்").[11]

கர்த்தருடைய இரக்கத்தின் மகத்துவத்தை மற்ற மூன்று வார்த்தைகள் காண்பிக்கின்றன. முதலாவது, தாவீதின் அக்கிரமச்செய்கைகள் "மன்னிக்கப்"பட்டிருந்தன (*aphienai* என்பதன் ஒரு வடிவம்). ஃபிரான்ஸ் டெலிட்ஸ்க் என்பவர் சங்கீதம் 32:1ல் "மன்னிக்கப்பட்டது" என்பதற்கான வார்த்தையை, "தூக்கி எடுத்துப் புறம்பே போடப்பட்டது" என்று விளக்கப்படுத்தினார்.[12]

இரண்டாவது, தாவீதின் பாவங்கள் "மூடப்பட்டு" இருந்தன. "மூடப்பட்டு" என்று மொழிபெயர்க்கப்பட்ட (*epikalupto* என்ற) வார்த்தை, "மேலே மூடுதல்" என்று அர்த்தப்படும் கூட்டு வார்த்தையாக உள்ளது (*epi* ["மேலே"] கூட்டல் *kalupto* ["மூடுதல்"]). NLT வேதாகமத்தில் இது, "put out of sight" என்றுள்ளது; AB வேதாகமத்தில் இது, "covered up and completely buried" என்றுள்ளது. டெலிட்ஸ்க் என்பவர் "மூடுதல்" என்பதற்கான வார்த்தையை, "பரிசுத்தமான தேவனுக்குக் காணப்படாததாகும்படி மற்றும் அது ஒருக்காலும் நடந்திராதது என்று இருக்கும் அளவுக்கு மூடுதல்" என்று விளக்கினார்.[13]

"எண்ணப்படும்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள மூன்றாவது

*சொற்றொடரானது பவுலின் விவாதத்திற்கு மாபெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. ரோமருக்கு எழுதிய நிருபத்தில் மேற்கோள் காண்பிக்கப்பட்ட வகையில், சங்கீதமானது "எவனுடைய அக்கிரமத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ" என்று கூறுகிறது. "எண்ணாதிருக்கிறாரோ" என்பது logizomai என்பதில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, இவ்வார்த்தை இவ்வதிகாரத்தின் எஞ்சிய பகுதியில் "எண்ணப்படும்" அல்லது "எண்ணப்பட்டது" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பவுல் தேவனுடைய திகைப்புக்குரிய "கணக்குவைக்கும் ஏற்பாடுகளை" காண இன்னொரு வழிவகையை முன்வைத்தார். 3 மற்றும் 5ம் வசனங்களில் அவர் தேவனுடைய "பேரேட்டை"க் காண்பதற்கு நேர்மறையான வழிவகையை முன்வைத்தார்: தேவன் "பாவிக்கு" நீதியை "பேரேட்டின் வரவு" பக்கத்தில் வரவு வைத்தார். 8ம் வசனத்தில் பவுல் தெய்வீக "பேரேட்டைக்" காண்பதற்கு எதிர்மறையான வழிவகையை முன்வைத்தார்: தேவன் பாவிக்கு அநீதியை "பேரேட்டின்" "பற்று" பக்கத்தில் பதிவு* செய்யவில்லை. *ரோமர் 4:8ல்* CJB வேதாகமம், "Blessed is the man whose sin [God] will not reckon against his account" *என்றுள்ளது.*

*இது எவ்வளவு குறிப்பிடத்தக்கதாக உள்ளது என்பதை மதித்தறிவதற்கு, தாவீது செய்திருந்த செயல்களுக்கு அவன்* பெறத்தகுதியாயிருந்தவற்றைப் *பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள். மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி, அவர் குறைந்தது இரண்டு கணக்குகளுக்காகக் கல்லால் எறிந்து கொல்லப்பட வேண்டியவராயிருந்தார்: விபசாரம் (உபாகமம் 22:22, 24; யோவான் 8:5ஐக் காணவும்) மற்றும் கொலை (லேவியராகமம் 24:17). இருப்பினும், அவரது பாவம் வெளிப்படுத்தப்பட்டபோது, அவர் நகரத்திற்கு வெளியே இழுத்துச்செல்லப்பட்டு, அவரது உயிரானது முறிந்துபோன உடலிலிருந்து வெளியேறும் வரையிலும் கல்லால் எறியப்படவில்லை. அதற்குப்பதிலாக அவரது பாவம் மன்னிக்கப்பட்டது … மற்றும் அது மூடப்பட்டது மற்றும் அது அவருக்கு எதிராக எண்ணப்படா திருந்தது! அவர் தம்மை "பாக்கியவான்" என்று அழைத்துக்கொண்டதில் வியப்பெதுவும் இல்லை!*

*சங்கீதம் 32:1, 2 வசனப்பகுதியானது தேவன் "கிரியைகளில்லாமல்" நீதியைக் கணக்கிடும் செயலுக்கு ஒரு உதாரணமாக உள்ளதென்று பவுல் கூறினார் (ரோமர் 4:6). தாவீது மன்னிக்கப்படுவதற்கு அவர் ஒன்றும்* செய்யத் *தேவையற்றிருந்தது என்று பவுல் கருத்துத்* தெரிவிக்கவில்லை. *தாவீதின் இருதயம் [அவர் செய்த பாவத்தை நினைத்து] வருத்தத்தினால் நொறுங்க வேண்டியிருந்தது (சங்கீதம் 51:17). அவர் தமது பாவத்தை ஒப்புக்கொண்டு, அதைக் கர்த்தரிடத்தில் அறிக்கையிட வேண்டியிருந்தது (சங்கீதம் 32:5; 51:3, 4 ஆகிய வசனங்களைக் காணவும்). அவர் பாவ மன்னிப்பிற்காக கர்த்தரிடத்தில் வேண்டிக்கொண்டு ஜெபிக்க வேண்டியிருந்தது (சங்கீதம் 51:1, 2, 9; 32:6). தேவனுடைய மன்னிப்பை ஈட்டுவதற்கோ அல்லது அதற்குத் தகுதிப்படுத்திக்கொள்வதற்கோ தாவீது செய்யக்கூடிய "கிரியை" ஒன்றும் இல்லாதிருந்தது என்பதே பவுல் இவ்விடத்தில்* கூறியதாகும். *அவரைக் கர்த்தர் மன்னித்தபோது, அது கிரியைகளின் அடிப்படையில் இன்றி கிருபையின் அடிப்படையிலேயே இருந்தது.*

*தாவீதின் உதாரணத்தில் (ரோமர் 4:6-8), பவுல் விசுவாசத்தைக் குறிப்பிடவில்லை; ஆனால் அவரது யூதவாசகர்களில் பெரும்பான்மை யானவர்கள் அனேகமாக, சங்கீதம் 32ஐ மனப்பாடமாக அறிந்திருப்பார்கள்.*

*முதல் இரு வசனங்களை மேற்கோள் காண்பித்த விஷயமானது அந்த சங்கீதம் முழுவதையுமே அவர்கள் நினைவுக்குக் கொண்டுவந்திருக்கும் - அதில் பின்வரும் வார்த்தைகளும் உள்ளடங்கியிருக்கின்றன: "கர்த்தரை நம்பியிருக்கிறவனையோ கிருபை சூழ்ந்துகொள்ளும்" (வசனம் 10ஆ).*

## அக்கறைகள் எடுத்துரைக்கப்பட்டன

*நமது வசனப்பகுதியில் பவுலின் அடிப்படைச் செய்தி தெளிவாகக் காணப்படுகிறது: கிறிஸ்தவம் என்பது நியாயப்பிரமாணம்/கிரியைகள் என்ற முறைமையில் ஆனதல்ல; அது கிருபை/விசுவாசம் என்ற முறைமையிலானது, கர்த்தர் நம்மைக் காண்கிறபோது, அவர் நமது பூரணமற்ற கீழ்ப்படிதல் மீது கவனம் குவிப்பதில்லை, ஆனால் அதற்கு மாறாக அவர் நமது விசுவாசத்தையே கண்ணோக்குகிறார். (தேவனுக்கு நன்றி!)*

இவ்விடத்தில் போதனை தெளிவாகக் காணப்பட்டபோதிலும், இந்த போதனையின் செயல்விளைவுகளைப்பற்றிக் கணிசமான அளவுக்குக் கருத்து வேறுபாடு உள்ளது. ஒருகடைசி முனையில் உள்ளவர்கள் "பவுலின் போதனை எவ்வகையான கிரியையும் நீக்கிப்போடுகிறது என்பது தெளிவு. குறிப்பாக, அது இரட்சிப்புக்கு ஞானஸ்நானம் ஒரு நிபந்தனையாக உள்ளது என்பதை நீக்கிப்போடுகிறது. இரட்சிக்கப்படுவதற்கு நாம் ஏதேனும் *செய்ய வேண்டும்* என்றால், அது நாம் நமது இரட்சிப்பை *ஈட்ட முடியும்* என்று அர்த்தப்படுகிறது" என்று கூறுகின்றனர். இன்னொரு கடைசிமுனையில் உள்ளவர்கள், "தனிநபர்கள் கிரியைகளினால் நீதிமான்களாக்கப்படுவதில்லை என்று நாம் போதித்தால், கர்த்தருக்காக ஊழியம் செய்யும் மக்களை நாம் உற்சாகம் இழக்கச் செய்பவர்கள் ஆவோம்" என்று கூறுகின்றனர். இந்த பதில் செயல்கள் நியாயமானவகையில் சாதாரணமானவைகளாக இருப்பதால், ஒருவேளை அவைகளைப் பற்றி கலந்துரையாட நாம் நேரம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

### கிரியைகள் எதிர். கீழ்ப்படிதல்

*சில காரணங்களுக்காக, ரோமர் 4ஐப் பற்றிச் சில எழுத்தாளர்களின் முதன்மை நடைமுறைச் செயல்பாடு, தேவனுடைய பிள்ளையாகுதல் பற்றி எடுத்துரைக்கிறது. பவுலின் உதாரணங்கள் (ஆபிரகாம் மற்றும் தாவீது ஆகியோர்) ஏற்கனவே தேவனுடைய பிள்ளைகளாக இருந்தனர் என்ற உண்மை இருந்த போதிலும், அவர்கள் இவ்வகை நடைமுறைச் செயல்பாட்டை ஏற்படுத்து கின்றனர்.[14] மனிதரின் இரட்சிப்பிற்கான தேவனுடைய திட்டத்தில் ஞான ஸ்நானம் ஒரு பாகமாக இருத்தலை நீக்கிப்போடுதல் என்பதே இந்த எழுத்தாளர்களில் பலருடைய முதன்மை விருப்பமாக உள்ளது என்பது தெளிவு.*

*நம்மில் சிலரைப்போன்று, ஏவுதல்பெற்ற எழுத்தாளர்கள் மேலோட்டமான "நேர்மாறுகள்" பற்றி அக்கறை கொண்டிருந்ததில்லை என்று நான் முந்திய பாடம் ஒன்றில் குறிப்பிட்டேன். ரோமர் 4ல், பவுல் நாம் கிரியைகளினால் நீதிமா னாக்கப்படுவதில்லை என்று வலிவாகப் போதித்தார். அதே வேளையில் நாம் ரோமர் 10ம் அதிகாரத்தை அடைகையில், வாயினால் அறிக்கை செய்தல் (செய்யப்படும் செயல்) இரட்சிப்பை விளைவிக்கிறது என்று கூற அவர்*

தயங்கவில்லை (வசனம் 10). ரோமர் 6ல் அவர் மனப்பூர்வமாகக் கீழ்ப்படிதல் பற்றிப் பேசினார் (வசனம் 17) (*செய்யப்படும் செயல்*), இதில் ஞானஸ்நானத்தில் அடக்கம் பண்ணப்படுதலும் உள்ளடங்குகிறது (வசனங்கள் 3-6). அந்தத் தண்ணீரில் அடக்கம் பண்ணப்பட்ட *பின்பு*, ஒருவர் "புதிய ஜீவனுள்ளவராக" நடந்துகொள்ளும்படிக்கு எழப்பப்படுகிறார், அவர் இனியும் பாவத் திற்கு அடிமையாக இருப்பதில்லை (வசனங்கள் 4, 17, 18; 7:6ஐக் காணவும்). இருப்பினும், இரட்சிப்பின் இவ்விரு அம்சங்களையும் இசைவிக்கப் பவுல் எந்த முயற்சியும் செய்யவில்லை. நாம் கிரியைகளினால் நீதிமானாக்கப்படுவ தில்லை (இரட்சிக்கப்படுவதில்லை) என்பது உண்மையாகவே உள்ளது. இரட்சிக்கப்பட்டிருப்பதற்கு (நீதிமானாக்கப்பட்டிருப்பதற்கு) நாம் தேவ னுக்குக் கீழ்ப்படிய வேண்டும் - இது நமது விசுவாசத்தை அறிக்கையிடுதல் மற்றும் ஞானஸ்நானம் பெறுதல் ஆகியவற்றை உள்ளடக்குகிறது - என்பதும் உண்மையாக உள்ளது. இவ்விரு சத்தியங்களையும் முன்வைத்து அதை அப்படியே விட்டுவிடுவதில் பவுல் நிறைவடைந்தார்.

**"ஈட்டுதல்" எதிர். "சொந்தமாக்குதல்"**

இருந்தபோதிலும், நாம் கிரியைகளினால் இரட்சிக்கப்படுவதில்லை என்ற அப்போஸ்தலரின் செய்தியை, இரட்சிக்கப்படுவதற்கு நாம் சிலவற்றைச் *செய்யவேண்டும்* என்ற வேதாகம உபதேசத்துடன் இசைவிப்பதற்கு, நீங்களும் நானும் அடிக்கடி போராடுகிறோம். எனக்கு உதவிய ஒரு விளக்கத்தை நான் கேள்விப்பட்டேன்; அது ஒருவேளை உங்களுக்கும் உதவலாம்: நாம் நமது இரட்சிப்பை *ஈட்ட* முடியாது, ஆனால் நாம் அதை *சொந்தமாக்கிக்* கொள்ள வேண்டும்.

சிலவற்றை ஈட்டுதல் மற்றும் அதை சொந்தமாக்கிக் கொள்ளுதல் ஆகிய இரண்டிற்கும் இடையில் என்ன வேறுபாடு உள்ளது? ஒரு விவரிப்பு உதவிகரமா யிருக்கலாம்.[15] ஒரு மனிதர் கதவைத் தட்டி, தாம் பசியோடிருப்பதாகக் கூறுகிறார். அந்த வீட்டின் உரிமையாளர், தம்மிடத்தில் வெட்டப்பட வேண்டிய விறகுகள் கொஞ்சம் இருப்பதாகவும், அந்த மனிதர் அதை வெட்டிக்கொடுத்தால், தாம் அவருக்கு உணவளிப்பதாகவும் கூறுகிறார். அம்மனிதர் அந்த விறகை வெட்டித்தருகிறார், அப்போது அவருக்கு உணவளிக்கப்படுகிறது. அம்மனிதர் தமது உணவை *ஈட்டியிருக்கிறார்.* இன்னொரு மனிதர் வேறொரு வீட்டின் கதவைத் தட்டி, தாம் பசியோடிருப்பதாகக் கூறுகிறார். அந்த வீட்டின் உரிமையாளர் "நீங்கள் சரியான வேளையில் வந்திருக்கிறீர்கள். நான் என்னால் மாத்திரம் உண்டுமுடிக்க இயலாத அளவுக்கு, அதிக உணவைத் தயார்செய்திருக்கிறேன். வாருங்கள், வந்து என்னோடு உணவருந்துங்கள்!" என்று பதில் அளிக்கிறார். அம்மனிதர் வீட்டிற்குள் நடந்து சென்று, அவர் உணவு மேஜைமுன் அமர்ந்து, தனக்கு அளிக்கப்பட்ட உணவை மகிழ்வுடன் அனுபவிக்க முடியும். இந்த மனிதர் அந்த உணவை *ஈட்டியிருக்கவில்லை.* இருந்தபோதிலும், அவர் அதைச் *சொந்த மாக்க வேண்டியிருக்கிறது.* அவர் வீட்டிற்குள் செல்லுதல், உணவு மேஜையில் அமருதல், உணவைத் தமது வாய்க்குள் போடுதல் ஆகியவற்றைச் செய்யா திருந்தால் என்னவாகியிருக்கும்? அவர் அந்த உணவினால் கிடைக்கும் சத்தினை பெறாதிருப்பார்.

இரட்சிப்பு என்ற தேவனுடைய கொடையை நம்மால் *ஈட்ட* இயலாது,

ஆனால் அதை நாம் *சொந்தமாக்கிக்கொள்ள* வேண்டும். அதை நாம் *எவ்வாறு* செய்கிறோம்? என்பதே கேள்வியாக உள்ளது. தேவனுடைய கொடைகளில் சிலவற்றை நாம் எவ்வாறு சொந்தமாக்கிக்கொள்கிறோம் என்பது தெளிவாக உள்ளது. உணவு என்ற தேவனுடைய கொடையை உண்பதன்மூலம் நாம் சொந்தமாக்கிக் கொள்கிறோம். காற்று என்ற தேவனுடைய கொடையை சுவாசித்தல்மூலம் நாம் சொந்தமாக்கிக் கொள்கிறோம். இரட்சிப்பு என்ற தேவனுடைய கொடையை நாம் எவ்வாறு சொந்தமாக்கிக் கொள்கிறோம் என்பது இப்போது தெளிவாக இல்லையே. நாம் இதை எவ்வாறு செய்ய வேண்டும் என்று நமக்குக் கூறக்கூடிய ஒருவர், உண்மையில் நம்மை அழைத்தவராகிய தேவன் ஒருவரே - அதை அவர் தமது வசனத்தில் கூறியிருக்கிறார். விசுவாசத்தினால் நாம் இரட்சிப்பைச் சொந்தமாக்கிக் கொள்ள முடியும் என்று தேவனுடைய வசனம் நமக்குக் கூறுகிறது, இந்த விசுவாசம் *கீழ்ப்படிதலில்* வெளிப்படுத்தப்பட வேண்டும்.

### தேர்ந்துகொள்ளுதல் எதுவும் இல்லை எதிர். தனிப்பட்டவகையிலான தேர்ந்துகொள்ளுதல்

நான் மீண்டும் ஒரு எதிர்ப்பை முன்னெதிர்பார்க்கிறேன்: “ஆனால், நாம் எதையேனும் *செய்ய வேண்டும்* என்றால், அது *கிரியையாக* உள்ளது. நாம் கிரியைகளினால் இரட்சிக்கப்*படுவதில்லை* என்று பவுல் கூறினாரே.” ரோமருக்கு எழுதிய நிருபம் பற்றிய பல விளக்கவுரைகளை நான் கவனமாகப்படித்த பின்பு, “கிரியை” மற்றும் “கிரியைகள்” என்ற சொற்றொடர்கள் பற்றி, மத எழுத்தாளர்கள் பலரின் எண்ணப்போக்கு குறித்து இரு விஷயங்களை நான் நம்பி ஏற்றுக்கொண்டுள்ளேன்.

முதலாவது, “கிரியை” என்ற வார்த்தை சிலரை பதற்றம் அடையச் செய்கிறது என்பதை நான் நம்புகிறேன். “விசுவாசம் ஒரு கிரியை அல்ல” என்று வலியுறுத்தும் அளவுக்குக்கூட, இரட்சிக்கப்பட ஒரு மனிதர் சிலவற்றைச் செய்யவேண்டும் என்பதை மறைமுகமாய் உணர்த்த விளக்கவுரையாளர்கள் மிகவும் அஞ்சுகின்றனர். விசுவாசம் என்பது “தகுதியின் செயலாக” இருப்பதில்லை, ஆனால் ஒருவர் செய்யும் செயல் என்ற கருத்தில், இது ஒரு “செயலாக” அல்லது “கிரியையாக” உள்ளது. சார்லஸ் ஹோட்ஜ் என்பவர், “ஜெபம், மனந்திரும்புதல், தர்மம்கொடுத்தல் அல்லது அவ்வகையான வேறு எந்த செயலையும்போன்றே, விசுவாசம் என்பது ஒரு நடவடிக்கையாக [செயலாக] உள்ளது” என்று எழுதினார்.[16] விசுவாசத்துடன் தொடர்புடைய வகையில் “கிரியை” என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதில் இயேசு பிரச்சனை எதையும் கொண்டிருக்கவில்லை. அவர், “அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது” என்று கூறினார் (யோவான் 6:29). NCV வேதாகமம் இவ்வசனப்பகுதியைப் பின்வருமாறு மொழிபெயர்க்கிறது: “The work God wants you to do is this: Believe the One He sent.”

“விசுவாசம் என்பது கிரியையல்ல” என்று வலியுறுத்துபவர்கள் விசுவாசத்தைப் பின்வருவது போன்ற உருவகத்துடன் விவரிக்கின்றனர்: “விசுவாசம் என்பது தேவனிடத்தில் வெறும்கையை நீட்டுவதாகும்.” இந்த ஒப்புவமையுடன் நான் சண்டையிடுவதில்லை, ஆனால் “கையை நீட்டுதல்” என்பது ஒரு செயலாகும் என்பதை அவர்கள் அறியார்களா? “கையை நீட்டுதல்” என்பது *அதிக* வேலையாக

இல்லாதிருக்கலாம், ஆனால் அது *சிலவற்றைச்* செய்யும் ஒரு கிரியையே ஆகும்.

விசுவாசத்தை ஒருவகையில் பார்க்கையில் அது ஞானஸ்நானத்தைவிட அதிகமான "கிரியையாக" உள்ளது: விசுவாசம் என்பது நீங்கள் *செய்யும்* ஏதோ ஒன்றாக உள்ளது, ஞானஸ்நானம் என்பது *உங்களுக்குச்* செய்யப்படும் ஏதோ ஒன்றாக உள்ளது. விசுவாசித்தலில் பாவியானவர் செயல்படுபவராக இருக்கிறார்; ஞானஸ்நானம் பெறுவதில் அவர் செயல்படுத்தப்படுபவராக இருக்கிறார். டேவிட் லிப்ஸ்கோம்ப் என்பவர் இதன்மீது பின்வருமாறு விளக்கம் அளித்தார்:

> ஞானஸ்நானம் என்பது சிலவேளைகளில், ஞானஸ்நானம் பெறுபவரின் கிரியை என்று அழைக்கப்படுகிறது ... ; ஆனால் ஞானஸ்நானம் என்பது ... விசுவாசம் அல்லது மனந்திரும்புதல் என்பதைக் காட்டிலும், கிரியைகளின் ஒருசில பண்புகளையே கொண்டுள்ளது ... ஞானஸ்நானம் பெறுகிற நபர் தம்மை, ஞானஸ்நானம் கொடுப்பவரின் கைகளில் ஒப்புவிக்கிறார், மற்றும் அவர் சுயத்திற்கு மரித்து கிறிஸ்துவுக்குள் எழுப்பப்படுகிறார் [ரோமர் 6:3-6ஐக் காணவும்] ... ஒரு மனிதர் இறக்கும்போதும் அவரது உடலை அவருடைய நண்பர்கள் எடுத்துச்சென்று அடக்கம்செய்யும்போதும், அந்தச் செயலைப் புதைக்கப்பட்ட மனிதனின் செயல் என்று ஒருவரும் அழைக்க முடியாது.[17]

இரண்டாவது, மதரீதியான எழுத்தாளர்கள், தேவனுடைய கொடையான இரட்சிப்பை மனிதகுலம் சொந்தமாக்கிக்கொள்ளுதலில், "கிரியைகள்" (சிலவற்றைச் செய்தல்) என்பதன் இடத்தை உண்மையில் இறுகப்பற்றவில்லை என்று நான் நம்புகிறேன். சிலர், வில்லியம் டெம்ப்பிள் என்பவரின் பின்வரும் வார்த்தைகளை எதிரொலிக்கின்றனர்: "[என்] பாவம் என்பதே என் இரட்சிப்புக்கு நான் பங்களிக்கக்கூடிய ஒரே விஷயமாக உள்ளது ..."[18] இரட்சிக்கப்படுவதற்கு நாம் கிரியை எதையும் செய்வதில்லை, *ஏனென்றால் நாம் இரட்சிக்கப்பட்டு இருக்கிறோம்* என்று கூறுவதில் பெரும்பான்மையானவர்கள் நிறைவடைகின்றனர் - இது சத்தியத்தின் ஒரு அடிப்படைக்கூறு ஒன்றைக் கொண்ட கூற்றாக உள்ளது, ஆனால் இது எல்லா சத்தியத்தையும் வெளிப்படுத்தத் தவறுகிறது.

இரட்சிப்பு ஒரு *கொடையாக* உள்ளது, அது *ஈட்டப்படவோ* அல்லது அதைப் பெறுவதற்கு ஒருவர் தம்மைத் *தகுதிப்படுத்திக்கொள்ளவோ* இயலாது என்று ஐயப்பாட்டிற்கு இடமற்ற வகையில் உடைக்க இந்த எழுத்தாளர்கள் கொண்டுள்ள விருப்பத்தை நான் பாராட்டுகிறேன். அதேவேளையில், அவர்கள் கடந்தகாலத்தில், கால்வினிஸ்டிக் முன்குறிக்கப்பட்ட கொள்கைக்கும் தனிநபர் ஒவ்வொருவரின் சுயாதீன விருப்பத்திற்கும் இடையிலான போராட்டத்தை மறந்துவிட்டார்களோ என்று நான் ஆச்சரியம் அடைகிறேன்.

முன்குறித்தல் என்ற கொள்கையைப் போதிக்கும் இப்போதகர்கள், தனிநபர்கள் தங்களின் சொந்த இரட்சிப்புக்குச் செய்ய *ஒன்றும் கொண்டிருப்ப தில்லை* என்று போதித்தனர். குறிப்பிட்ட மக்கள் இரட்சிக்கப்படுவார்கள், மற்றவர்கள் இழந்துபோகப்படுவார்கள் என்று தேவன் முன்தீர்மானித்து வைத் திருக்கிறார் என்று அவர்கள் நம்பினர். "தேர்ந்துகொள்ளப்பட்டவர்கள்" தங்கள் சொந்த இரட்சிப்புக்கென்று முற்றிலும் எதையும் செய்யவில்லை. அவர்களின் இருதயங்களில் விசுவாசத்தைத் தேவன் ஏதேச்சையாக வைத்து அவர்களுக்கு ஆவிக்குரிய வாழ்வைக் கொடுத்தார் என்பதே நம்பிக்கையாயிருக்கிறது. இதற்கு

*மறுபுறத்தில், சுயாதீன விருப்பத்திற்குப் பரிந்துபேசுபவர்கள், ஒவ்வொரு நபரும் "சுயாதீனமுள்ள ஒழுக்க முகவராக" இருக்கிறார் என்று வலியுறுத்துகின்றனர். குறிப்பிட்ட ஒரு நபர், இரட்சிக்கப்படுகிறாரா அல்லது இழந்துபோகப்படுகிறாரா என்பது தேவனால் எடுக்கப்படும் எதேச்சையான முடிவின்படியானதல்ல, ஆனால் சுவிசேஷத்திற்கு, அந்தத் தனிநபர் பதில்செய்தல் அல்லது பதில்செய்யா திருத்தல் என்பதையே சார்ந்துள்ளது (ரோமர் 10:16).*

*முன்குறித்தல் பற்றி நாம் பின்வரும் பாடங்களில் கலந்துரையாடுவோம். இவ்வேளையில், சுயாதீன விருப்பம் என்பதையே வேதாகமம் போதிக்கிறது என்பதே, "கிறிஸ்தவர்கள்" என்று தங்களை அழைத்துக் கொள்ளுபவர்களில் பெரும்பான்மையானவர்களின் ஒருமுகப்போக்காக உள்ளது என்பதை நாம் கவனிப்போமாக. அதுவே என்னிடம் உள்ள ஒவ்வொரு விளக்கவுரையிலும் உள்ள நிலைப்பாடாகவும் இருக்கிறது. விஷயம் அப்படியிருக்கும்போது, இரட்சிக்கப்பட்டிருப்பதா இல்லையா என்பதைக் கடைசியில் முடிவு செய்வது அந்தந்தத் தனிநபரே என்று ஒப்புக்கொள்வது எழுத்தாளர்களுக்குச் சிரமமா யிருக்க வேண்டியது ஏன்?*

- *அவர் சுவிசேஷத்தைக் கேள்விப்பட முடியும் அல்லது அதைப் புறக்கணிக்க முடியும்.*
- *அவர் இயேசுவில் விசுவாசம் கொள்ள முடியும் அல்லது விசுவாசிக்கத் தவற முடியும்.*
- *அவர் கர்த்தருடைய அழைப்பை ஏற்றுக்கொள்ள முடியும் அல்லது புறக்கணிக்க முடியும்.*
- *அவர் தேவனுக்குக் கீழ்ப்படிய முடியும் அல்லது கீழ்ப்படிய மறுக்க முடியும்.*
- *அவர் கிறிஸ்துவைப் பின்பற்ற முடியும் அல்லது புறம்பே திரும்பிப் போக முடியும்.*

*ஒருவர் கேள்விப்பட்டு, விசுவாசித்து, ஏற்றுக்கொண்டு, கீழ்ப்படிந்து மற்றும் பின்பற்றுகிறார் என்றால், அவர் தமது இரட்சிப்பை ஈட்டியுள்ளார் என்று அது அர்த்தப்படுத்துகிறதா? இல்லவே இல்லை. இருப்பினும், அது அவர் தமது சொந்த இரட்சிப்பில் ஒரு பாகத்தைக் கொண்டிருக்கிறார் என்று அர்த்தப்படுகிறது. அது, தேவன் நமக்குச் செய்துள்ளவற்றுடன் ஒப்பிடுகையில் "ஒன்றுமில்லை" என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். அது ஒரு* மிகச்சிறிய *பகுதியாகவே உள்ளது - ஆனாலும் அது இன்னமும் ஒரு பகுதியாக உள்ளது. இந்த அளவுக்கு ஒரு தனிநபர் தமது சொந்த இரட்சிப்புக்குப் பங்களிக்கிறார். "பங்களித்தல்" என்ற வார்த்தைகுறித்து நாம் இரட்டை அர்த்தத்தில் பேசாதிருப்போமாக. ஒரு நபர் தேவனுடைய கிருபையை சொந்தமாக்கிக்கொள்ள வேண்டுமென்றால், அவர் சிலவற்றைச் செய்ய வேண்டும் என்று வேதாகமம் போதிக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்வோமாக (நடபடிகள் 2:37, 38).*

**கடமை எதிர். அன்பு**

*இந்தப்பாடத்தின் பெரும்பகுதி, கீழ்ப்படிதலின் அவசியமானது கிருபைபற்றிய பவுலின் போதனையை ஒன்றுமற்றதாக்குகிறது என்று*

நினைப்பவர்களின் கவலைகளை நோக்கங்கொண்டதாக இருந்துள்ளது. நாம் இதை முடிப்பதற்கு முன்னர், "விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல்" மீதான போதனை, மக்களைக் கர்த்தருக்கென்று ஊழியம் செய்வதிலிருந்து உற்சாகத்தைக் குறைக்கலாம் என்ற கவலைபற்றி நான் ஒரு வார்த்தை கூறவேண்டியது அவசியமாக உள்ளது.

ரோமர் 4ஐப் பற்றி சகோதரர் தாமஸ் என்பவர் கலந்துரையாடுகையிலும், அவர் நியாயப்பிரமாணம்/கிரியைகள் முறைமையை கிருபை/விசுவாசம் முறைமையுடன் நேரெதிராக ஒப்பிடுகையிலும், தக்கவகையில் புரிந்துகொள்ளப்பட்டால், இரண்டாவது விஷயமானது, குறைவானதையல்ல ஆனால் *அதிகமான* ஊழியத்தையே விளைவிக்கும் என்று வலியுறுத்தினார். அவர், மருத்துவத்தாதியாக வேண்டும் என்று விரும்பிய ஒரு இளம்பெண்ணைப்பற்றிய பின்வரும் விவரிப்பு உட்படப் பல விவரிப்புகளைப் பயன்படுத்தினார்:[19]

> ஒரு மருத்துவத்தாதி தனது பயிற்சி முடித்துப் பட்டம் பெற்று, நிமோனியா காய்ச்சலால் மிகவும் சுகவீனப்பட்டிருந்த ஒரு குழந்தையைக் கவனித்துக்கொள்ளும் வேலையைப் பெற்றாள். இங்கு அவளது வேலையானது மனிதத்தகுதிக்குரியதாக, சம்பளத்திற்காகச் செய்யப்படுவதாக, மற்றும் இவ்வளவு வேலைக்கு இவ்வளவு சம்பளம் என்ற ஒப்பந்தத்தின் அடிப்படையிலானதாக இருந்தது. அவள் இந்த ஏற்பாட்டின்கீழ் தனது ஊதியங்கள் பற்றிப் பெருமைபாராட்டுவது தர்க்கரீதியாகத் தகுதியானதாயிருந்தது, ஏனென்றால் அவள் நன்கு செய்யப்பட்ட வேலைக்கு மதிப்பு [ஊதியம்] பெறத்தகுதி உடையவளாக இருக்கிறாள். அவளுக்குத் தரப்படும் வெகுமதி அல்லது ஊதியம் என்பது கொடை என்ற வகையில் அல்ல ஆனால் அவளுக்குத் தரப்பட வேண்டிய கடன் என்ற வகையிலேயே உள்ளது. ஊதியத்தொகையைத் தீர்மானிப்பதில் கிருபையோ அல்லது அன்போ பயன்படுத்தப்படவில்லை. ஆயினும் பிற்பாடு, அந்தத்தாதி திருமணம் முடித்து, காலாகாலத்தில் அவளும் அவளுடைய கணவரும் தங்களுக்கு சொந்தமாக ஒரு குழந்தையைப் பெறுகின்றனர், அந்தக் குழந்தைக்கு நிமோனியா காய்ச்சல் தொற்றிக் கொள்கிறது, அதற்கு ஒரு சிறந்த மருத்துவத்தாதியின் சேவைகள் தேவைப்படுகிறது. இப்போது அந்தத் தாய்க்கு, அவளது சேவைகளுக்கு ஊதியத்தை உத்தரவாதப்படுத்தும் ஒப்பந்தம் எதுவும் தேவைப்படுவதில்லை - அவள் அடியெடுத்துவைத்து, தான் செய்யத்தகுதி பெற்றுள்ள வேலையைச் செய்கிறாள், இது அவள் தன் குழந்தையின்மீது வைத்துள்ள அன்பு மற்றும் அவளது உறவுமுறை ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்துள்ளது. அந்தக் குழந்தை துன்புறும்போது அவளும் துன்புறுகிறாள்; அந்தக் குழந்தையின் உடல்நலம் மேம்படும்போது, முழுக்குடும்பமும் மகிழ்கிறது. அவள் அன்பு மற்றும் உறவுமுறை ஆகியவற்றினிமித்தம் மிகவும் நீண்டநேரம் மிகவும் கடினமாகக்கூட வேலைசெய்கிறாள், அவள் ஒருபோதும் கடியாரத்தை கவனிப்பதில்லை. இப்போது அவளது வேலை கிறிஸ்தவரின் "கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்தின்" ஊழியத்திற்கு ஒப்பானதாக உள்ளது.[20]

நீங்கள் தேவனுடைய ஆச்சரியமான கிருபை பற்றிய உங்கள் புரிந்துகொள்ளுதலில் வளரும்போது, கர்த்தருக்கான உங்கள் முயற்சிகள் "உங்கள் கடமையைச் செய்தல்" என்பதில் இருந்து படிப்படியாகக் குறைந்து, "அன்பின்

*ஊழியம்" என்ற வகையில் படிப்படியாக வளரும் (1 தெசலோனிக்கேயர் 1:3ஐக் காணவும்)!*

## முடிவுரை

இந்தப் பாடத்தின் தொடக்கத்தில் உள்ள நீதிமானாக்கப்படும் இரு முறைமைகள் பற்றிய வரைபடத்தைத் திரும்பவும் பாருங்கள்: நியாயப்பிரமாணம்/கிரியைகள் முறைமை மற்றும் கிருபை/விசுவாசம் முறைமை.

- முதல் முறைமை, ஒருவர் தாம் செய்துள்ளவை பற்றி *மேன்மை பாராட்டுதலை* ஊக்குவிப்பதாக இருக்கையில் (வசனம் 2), இரண்டாவது முறைமை *தாழ்மையையும்* தேவனைச் சார்ந்திருத்தலையும் ஊக்குவிக்கிறது.
- ஒருவர் தமது இரட்சிப்பை *ஈட்டுதல்* என்பது முதல் முறைமையின் வலியுறுத்தமாக இருக்கும் வேளையில், இரட்சிப்பை ஈட்டுதல் என்பது சாத்தியமற்றது, அது *கிரியைகளின்படியானதல்ல* (அவ்வாறு இருக்க முடியாது) என்று இரண்டாவது முறைமை அறிவிக்கிறது.
- முதலாவது முறைமை *மனிதத் தகுதியின்* அடிப்படையிலானதாக இருக்கும் வேளையில், இரண்டாவது முறைமை, ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் *சுயத்தினால் அல்ல,* ஆனால் கர்த்தரிடத்தில் இருந்து வருகின்றன என்று ஒப்புக்கொள்கிறது.
- முதலாவது முறைமை மனித *சாதனைகளில்* மையங் கொண்டிருக்கையில், இரண்டாவது முறைமை *தேவனுடைய கிருபையை நம்பியிருத்தலை* அடிப்படையாகக் கொண்டுள்ளது.
- முதலாவது முறைமை இரட்சிப்பைத் தேவன் நமக்கு பட்டுள்ள *கடன்* என்று ஆக்க முயற்சி செய்கிற வேளையில் (வசனம் 4), இரண்டாவது முறைமை மீட்பு என்பது கர்த்தரிடத்திலிருந்து வருகிற ஒரு *கொடை* என்று ஒப்புக்கொள்கிறது.

நேர்மாறைக் கவனமாக ஆழ்ந்து சிந்தியுங்கள். பவுல் எந்த முறைமையைப் போதித்தார்? நீங்கள் எந்த முறைமையின்கீழ் இருக்க விரும்புவீர்கள்? எந்த முறைமை *நம்பிக்கையை* அளிக்கிறது?

ஒருமுறை ஒரு சுவிசேஷ ஊழியர், ஒரு பெரிய ஸ்காட்டிஷ் நகரத்தின் சேரிப்பகுதிகளில் பிரசங்கித்துக் கொண்டிருந்தார். குடிகாரர்கள், "தெருவாழ் மக்கள்" மற்றும் விபசாரிகள் ஆகியோரிடத்தில் அவர் பேசுகையில், அவர்கள் "தங்களை சாக்கடையிலிருந்து வெளியே இழுத்துக்கொள்ளுமாறு" அவர்களை அவர் ஊக்குவித்தார். வாழ்வை மீண்டும் புதியதாகத் தொடங்குமாறு அவர்களுக்கு அவர் அறைகூவல் விடுத்தார். கும்பலின் முனையில் ஒரு பெண் நின்றுகொண்டிருந்தாள், அவளது வாழ்வு பாவம் மற்றும் சீரழிவு ஆகியவற்றில் ஆழமாய் ஊறியிருந்தது. சிறந்தவற்றைச் செய்யும்படியான ஊக்கமான புத்திகூறுதல்களை ஒருமணிநேரம் வரையில் கவனித்துக்கேட்டபின்பு, அவளால் இனியும் அதைச் சகிக்க முடியாது இருந்தது. பேச்சாளருக்குக் கேட்கும்படி அவள், "உங்கள் கயிறு என்னை வந்து அடையக்கூடாத அளவு குட்டையாக உள்ளது" என்று சத்தம்போட்டுக்

*கூறினாள்.*[21] *தனது பாவத்தைப்பற்றியும் போதுமற்ற தன்மையைப் பற்றியும் அறிந்துள்ள எந்த ஒரு நபரும், ஒரு நியாயப்பிரமாணம்/கிரியைகள் முறைமை யினால் நீட்டப்படும் "கயிறு" எதுவும் பாவத்தில் உள்ள தன்னை வந்தடையவும் தன்னைத் தனது குற்றத்திலிருந்து இழுத்துவிடவும் போதிய நீளமற்றதாக இருப்பதை அறிகிறார். கிருபை/கிரியைகள் முறைமை மாத்திரமே பாவியைச் சென்று சேரக்கூடிய அளவுக்குப் போதிய நீளமுள்ள "கயிறை" கொண்டுள்ளது. கிறிஸ்துவின் சிலுவை மரணத்தில் வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய அன்பே அந்தக் "கயிறாக" உள்ளது.*

---

குறிப்புகள்

[1]*இந்தத் தொடக்க நிகழ்ச்சி எனது நினைவுகள் மற்றும் 1955ல் அபிலேன் கிறிஸ்தவக் கல்லூரியில்* J. D. *தாமஸ் அவர்களின் வகுப்பறைக் குறிப்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்துள்ளது.* [2]*4:1-3, 5 உடன் தொடர்புடைய வகையில் logizomai என்ற வார்த்தை பற்றிய கலந்துரையாடலைக் காணவும்.* [3]W. E. Vine, Merrill F. Unger and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 150. [4]Leon Morris, *The Epistle to the Romans* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 198. [5]Ibid. [6]*"பாக்கியவான்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (makarios என்ற) வார்த்தை, தேவனிடத்தில் விசுவாசம் நிறைந்த பிள்ளை மாத்திரம் அறியக்கூடிய தனிச்சிறப்பான மகிழ்ச்சியைக் குறிப்பிடுகிறது. இது "சந்தோஷமும் இன்னும் அதிகமானதும்" என்று நினைக்கப்பட்டிருக்கலாம்.* [7]*பவுலைப் பொறுத்தமட்டில் பொதுவானதாக இருந்தவகையில், இவ்விடத்தில் அவர் பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பில் (செப்துவஜிந்த் அல்லது* LXX*) இருந்து மேற்கோள் காட்டினார்.* [8]*அந்த வரலாறு உங்கள் உரையைக் கேட்பவர்களுக்குப் பழக்கமற்றதாக இருந்தால், நீங்கள் அதை மறு கண்ணோட்டமிட விரும்பலாம்.* [9]*"மன்னிப்பிற்காக மனம்வருந்தும் பாவியின் ஜெபம்" என்பது சங்கீதம் 51க்கு மேல் உள்ள பழங்காலத் தலைப்பாகும்.* [10]James E. Smith, *The Wisdom Literature and Psalms,* Old Testament Survey Series (Joplin, Mo.: College Press Publishing Co., 1996), 261.

[11]*3:23ன்மீதான நமது கலந்துரையாடலில் "பாவம்" என்ற வார்த்தையின்மீதான படிப்பைக் காணவும். "பாவம்" என்பதன் வினைச்சொல் வடிவம் அந்த வசனத்தில் பயன்படுத்தப்பட்டிருந்தது, அதேவேளையில் அவ்வார்த்தையின் பெயர்ச்சொல் வடிவம் 4:7, 8ல் பயன்படுத்தப்பட்டுள்ளது.* [12]C. F. Keil and Franz Delitzsch, "Psalms," *Commentary on the Old Testament*, vol. 5 (Peabody, Mass.: Hendrickson Publishers, 1989), 395. [13]Ibid. *"அது ஒருக்காலும் நடந்திராதது போல்" என்ற வார்த்தைகள் தாவீதின் பாவத்தினுடைய குற்ற இயல்பை மாத்திரமே குறிக்கின்றன, அவைகள் அந்தப்பாவத்தின் விளைவைக் குறிப்பிடுவதில்லை (2 சாமுவேல் 12:10ஐக் காணவும்).* [14]This thought is expanded in Robertson L. Whiteside, *A New Commentary on Paul's Letter to the Saints at Rome* (Fort Worth, Tex.: Manney Co., 1945), 89-90. [15]*இந்த விவரிப்பை நீங்கள் வாழும் பகுதிக்குத் தக்கவாறு (உதாரணமாக, ஒரு மனிதர் செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படும் வேலைபற்றி) தழுவியமைத்துக் கொள்ளுங்கள்.* [16]Charles Hodge, *Commentary on the Epistle to the Romans* (Princeton, N.J.: N.p., 1886; reprint, Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1968), 109. [17]David Lipscomb, *A Commentary on the New Testament Epistles*, vol. 1, *Romans*, 2d ed., rev. and enl. (Nashville: Gospel Advocate Co., 1943), 82. [18]Quoted in Leslie C. Allen, "Romans," *New International Bible Commentary*, ed. F. F. Bruce (Grand Rapids, Mich.: Zondervan Publishing House,

1979), 1324. [19]*இந்த விவரிப்புகளும், இத்துடன் கூடுதலாக இன்னொரு விவரிப்பும், பின்வரும் புத்தகத்தில் தரப்பட்டுள்ளன:* David Roper, *Jesus Christ and Him Crucified* (Arvada, Colo.: Christian Communications, 1976), 106-8. [20]J. D. Thomas, *Romans,* The Living Word series (Austin, Tex.: Sweet Publishing Co., 1965), 33.

[21]Adapted from David F. Burgess, comp., *Encyclopedia of Sermon Illustrations* (St. Louis: Concordia Publishing House, 1988), 125.